**செய்தி வெளியீடு எண் : 1204** **நாள் : 17.07.2022**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு**

தனது முதல் சிங்கப்பூர் ஓப்பன் வெற்றியைப் பதிவுசெய்துள்ள நமது ஊக்கமிகு இறகுப்பந்து வீராங்கனை பி.வி. சிந்து அவர்களுக்கு எனது பாராட்டுகள். இதே ஆற்றலோடும் உத்வேகத்தோடும் பிர்மிங்காம் காமன்வெல்த் போட்டிகளிலும் விளையாட வாழ்த்துகிறேன்.

அடிவானத்தில் ஒரு புதிய விண்மீனாகத் தோன்றியுள்ளார் கிராண்ட்மாஸ்டர் குகேஷ்! செஸ் விளையாட்டில் 2700 ELO தரப்புள்ளிகள் என்ற சிறப்பான மைல்கல்லை அவர் அடைந்திருக்கிறார். இது மிகவும் அரிய சாதனை. எதிர்காலத்தில் சென்னையைச் சேர்ந்த இளம் வீரரான குகேஷிடம் இருந்து இன்னும் பல வியத்தகு சாதனைகளை நாம் காணப்போகிறோம். அதற்கு எனது வாழ்த்துகள்!

பாரசின் ஓப்பன் செஸ் தொடரில் அபாரமான ஆதிக்கத்தை வெளிப்படுத்தி வென்றுள்ள கிராண்ட்மாஸ்டர் பிரக்ஞானந்தாவுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரு இளம் கிராண்ட்மாஸ்டர்களும் எதிர்வரும் சென்னை செஸ் ஒலிம்பியாட் போட்டித் தொடரில் தங்களது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வாழ்த்துகிறேன்.

Congratulations to our agile and ace-shuttler P V Sindhu on winning her maiden Singapore Open title. Wishing her to carry on this energy and momentum to Birmingham Common Wealth Games as well.

Grandmaster Gukesh D is the new star on the horizon. He has achieved a significant milestone by reaching 2,700 ELO ratings mark in Chess. This is a rare feat and we are going to witness many more astonishing records from this young Chennai lad in future. All the best!

I also congratulate GM Praggnanandhaa R for the Paracin Open 'A' chess tournament title with his splendid display of dominance.

Wishing both the young Grandmasters to give their best in Chennai Chess Olympiad.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in